## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

களனிப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த பாளி மற்றும் பௌத்த பட்டப்பின்படிப்பு நிறுவனத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடங்களாக நிதிக்கூற்றுகளுக்குரிய குறிப்புகளை கொண்டமைந்த 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் பிரகாரம் விதிக்கப்பட்டுள்ள 1979 இன் 08 ஆம் இலக்க பாளி மற்றும் பௌத்த கற்கை பட்டப்பின் படிப்பு நிறுவன விதப்புரையின் 23 ஆம் பிரிவு மற்றும் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 107(5) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் அரசியலமைப்பு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிறுவனத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம், நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

ஒட்டுமொத்தமாக மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றினை வழங்கும் போது அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுகள் ஏற்படும் ஆபத்துகளை இனங்காணல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிட்டு செயற்படுத்தப்பட்டது. தவறாக காண்பிப்பதால் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றுகளினால் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி காரணமாக ஏற்படும் தாக்கம் அதிகமாயின் அவற்றை கூட்டுத் சதியின ஊடாக, போலியான ஆவணங்களை தயாரிப்பதன் மூலம், வேண்டுமென்றே விட்டு விடுதல் போன்ற காரணங்களால் ஆகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான

நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்றவரையில் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவனம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- நிறுவனத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 சட்டங்கள், விதிகள்,பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இன் | செயல்நிமித்த உப கட்டுநிதி வழங்கக்கூடிய உச்ச எல்லையான ரூபா 100,000 தொகையை விஞ்சி பதவிநிலைத் தரமற்ற 07 சந்தர்ப்பங்களில் ரூபா | நிறுவனத்தின் முகாமைத்துவ உதவியாளர் பதவியின் உத்தியோகத்தர்களுக்கு ரூபா 100,000 தொகையை விஞ்சி காசு முற்பணம் வழங்குதல், செலவினம் மேற்கொள்ள மற்றும் | சுற்றறிக்கைகள் மற்றும் நிதிப் பிரமணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | 09 ஆம் பந்தியில் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 371(2)(ஆ) | 1,010,400 கூட்டுப் பெறுமதியுடைய முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. | முற்பணங்களை தீர்ப்பனவு செய்தல் ஆகியவை உரிய பிரிவின் பிரதான உத்தியோகத்தர்களின் முன் அங்கீகாரம் மற்றும் கண்காணிப்பின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது என்பது. | |
| (ஆ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபனவிதிக் கோவையின் XXVi ஆம் அத்தியாயத்தின் 3.1 ஆம் பிரிவு | 2023 ஆம் ஆண்டுக்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மதிப்பாய்வு பணிகள் தற்போது நிறைவு செய்யப்பட்டுள்ளது. கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க துரித நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | சுற்றறிக்கை விதிகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2022 சனவரி 03 ஆந் திகதிய .. ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கையின் 04(i) ஆம் பிரிவு | வாசிகசாலைப் புத்தகங்கள் 100,000 இனை விட குறைவாக காணப்படும் எனின், வாசிகசாலை பொருட்களை வருடாந்தம் மெய்மையாய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டிய போதிலும், நிறுவனத்தின் வாசிகசாலையில் காணப்பட்ட 25,709 புத்தகங்களுக்கு 2020 ஆம் ஆண்டின் பின்னர் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் சரியானது ஆகும். தற்போது 2023 ஆம் ஆண்டுக்கான புத்தகங்களின் மெய்மையாய்வு நிறைவு செய்யப்பட்டுள்ளது என்பது. | சுற்றறிக்கை விதிகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2015 நவம்பர் 17 ஆந் திகதிய 05/2015 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழச் சுற்றறிக்கை | 2023 ஆம் ஆண்டின் திசெம்பர் மாதம் நடாத்தப்பட்ட 14 பாடநெறிகளின் பரீட்சைப் பெறுபேறுகள் 2024 ஏப்ரல் 01 ஆந் திகதி வரை வெளியிடப்பட்டிராததுடன், 2022 | நிறுவனத்தின் பதவியணிப் பற்றாக்குறையின் அடிப்படையில் மாணவர்களை பதிவு செய்தல் முதல் பெறுபேறுகளை வெளியிடல் வரை நடவடிக்கை எடுப்பதற்கு முகாமைத்துவ | தாமதமின்றி பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | |
|---|---|
| கல்வியாண்டில் நடாத்தப்பட்ட பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு 05 மாதங்கள் முதல் 12 மாதங்கள் 02 நாட்கள் வரையான காலம் கடந்திருந்தது. | உதவியாளர்கள் இருவர் மாத்திரம் காணப்படுகின்றமை. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 143,243,767 ஆன மிகையாக காணப்பட்டதுடன், முன்னைய ஆண்டின் மிகை ரூபா 221,756,371 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 78,512,604 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு வெகுமதிகள் மற்றும் நன்கொடை (நிதி) பெறுவனவு குறைவடைந்தமை, தன்னியக்க நிதி பாடநெறி வருமானங்கள் குறைவடைந்தமை மற்றும் பெறுமானத்தேய்வு அதிகரித்தமை ஆகியன பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 தொழிற்பாட்டு செயற்திறனின்மை**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| பட்டதாரி மாணவர்களால் ஆராச்சி அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்ட பின்னர், நிறுவனத்தினால் 22 சந்தர்ப்பங்களில் முதல் மற்றும் இரண்டாவது பரிசோதகர்களுக்கு அனுப்புவதற்க 37 நாட்கள் முதல் 198 நாட்கள் வரை காலம் கடந்திருந்ததுடன், ஆராய்ச்சி அறிக்கைகள் முதல் பரிசோதகர் மற்றும் இரண்டாவது பரிசோதகர்களால் பரிசோதிப்பதற்கு 90 நாட்களை விட கடந்த 40 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. அவற்றுள் 21 சந்தர்ப்பங்களில் 180 நாட்களை விட அதிக காலமும், 6 சந்தர்ப்பங்களில் 360 நாட்களை விட அதிக காலம் கடந்திருந்தது. அவ்வாறே, இந்த ஆராய்ச்சி அறிக்கைகளை சமர்ப்பித்த 35 மாணவர்கள் வாய்மொழிமூல பரீட்சைக்கு தோற்றிய நாள் முதல் 59 முதல் 570 நாட்கள் வரையான காலத்தின் பின்னர் பட்டமளிப்பு விழாவில் பங்குபற்றியிருந்தனர். அதன் பிரகாரம், 2023 ஏப்ரல் முதல் 2024 | வாய்மொழிப் பரீட்சைகளை நடாத்தி அங்கு கொடுக்கப்பட்டுள்ள பரிந்துரைகளின்படி மீண்டும் ஆய்வறிக்கையைத் தயாரித்து சமர்ப்பிக்க சில மாதங்கள் அவகாசம் அளிக்கப்படுகிறது. இந்நிறுவனத்தின் பட்டமளிப்பு விழா ஆண்டுக்கு ஒருமுறை மட்டுமே நடைபெறும். கோவிட் 19 தொற்றுநோய் காரணமாக, 2020, 2021 இல் பட்டமளிப்பு விழா நடைபெறாததால் பட்டமளிப்பு விழா தாமதமடைந்துள்ளது. | இளங்கலை பட்டதாரிகளுக்கு பட்டங்கள் வழங்குவதில் ஏற்படும் தாமதங்களைக் குறைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

பெப்ரவரி மாதம் வரையான காலப்பகுதியினுள் பெறுபேறுகளுக்கான சான்றுபடுத்தல் சபையின் அங்கீகாரம் கிடைத்திருந்ததுடன், 35 ஆராய்ச்சி அறிக்கைகளை ஒப்படைத்த திகதி முதல் 275 நாட்கள் முதல் 2037 வரையான காலம் கடந்திருந்தது.

**3.2 பெறுகை முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 ஆம் ஆண்டின் பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிராத கொள்வனவுகளுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 7,242,940 செலவிடப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டில் அத்தியாவசிய கொள்வனவ் நடவடிக்கைகளுக்காக நிறுவன நிதியிலிருந்து ரூபா 7,242,940 செலவிடப்பட்டிருந்தது. 2023 ஆம் ஆண்டிற்கான பெறுகைத் திட்டம், நிறுவனத்தின் கொள்முதல் நடவடிக்கைகளுக்காக அரசாங்கத்தால் வழங்கப்பட்ட ஒதுக்கீடுகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டது. | எதிர்கால கொள்வனவு தேவைகளை முன்கூட்டியே கண்டறிந்து தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |